முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.
முன்னிலை : திரு.பா.கௌதமன்,B.A.,B.L.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ம் நாள் வியாழக்கிழமை
**வாரிசுரிமை அசல் மனு எண்.3/2017**
CNR.No.TNTP04-000295/2017

1. D.பூங்குடி.
2. D.லட்சுமி.
3. D.கௌரி. . . . மனுதாரர்கள்.

- எதிர் -

யூனியன் ஆப் இந்தியா அதன் சார்பாக
1. பொது மேலாளர்,
தெற்கு இரயில்வே, பார்க் டவுன்,
சென்னை - 600 003.
2. பிரிவு பணியாளர் அதிகாரி,
தெற்கு இரயில்வே,
திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் - 620 001.
3. D.லீலாவதி.* . . . எதிர்மனுதாரர்கள்.
*(Amended as per order in I.A.No.1/2019, dated 20.07.2021).

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 17.11.2025 ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தும் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவி அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.S.ராஜா கணேஷ் அவர்கள் முன்னிலையாகியும், மனு, எதிருரை, ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்....

**உத்தரவு**

இறந்து போன A.தர்மராஜ் அவர்களின் ஓய்வூதியத் தொகையில் 50%தொகையை இன்றைய தேதி வரை 1ம் மனுதாரர் பூங்குடி–க்கு வழங்கக் கோரியும், 50%தொகையை 2ம் மனுதாரர் லட்சுமி–க்கு அவரது திருமண தேதி 03.02.2016 வரைக்கும், 3ம் மனுதாரர் கௌரி–க்கு 04.02.2016ம் தேதி முதல் இன்றைய தேதி வரைக்கும் வழங்கக் கோரியும், மனுதாரர்கள் இந்திய வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 372ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம் :**

i. 1ம் மனுதாரர் மற்றும் 3ம் எதிர்மனுதாரர் இறந்து போன A.தர்மராஜ் என்பவரின் முதல் மற்றும் இரண்டாம் மனைவிகள் ஆவார்கள். 2 மற்றும் 3 மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரான லீலாவதியின் மகள்கள் ஆவார்கள். A.தர்மராஜ் என்பவர் 2ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டின் கீழ் தென்னக ரயில்வே, திருச்சிராப்பள்ளி ஜங்ஷன், திருச்சிராப்பள்ளி குட்ஷெட், கேரேஜ் மற்றும் வேகன் பிரிவில் பிட்டராக பதவி வகித்து வரும் காலத்தில், பணியில் இருக்கும்போது கடந்த 29.01.1995ம் தேதியன்று பெரம்பூர் இரயில்வே மருத்துவ மனையில் காலமானார்.

ii. மேற்படி காலஞ்சென்ற தர்மராஜ் அவர்களுக்கு 1ம் மனுதாரர் – முதல் மனைவியும், 3ம் எதிர்மனுதாரர் – இரண்டாம் மனைவியும், இவருக்கு பிறந்த மகள்கள் 2 மற்றும் 3 மனுதாரர்கள் வாரிசுகள் ஆவார்கள். 1ம் மனுதாரர், 2, 3 மனுதார்கள் மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளியில் Succ.O.P.No.51/1999 என்ற எண்ணில் வழக்கு தொடுத்து, கடந்த 29.08.2003ம் தேதியன்று தீர்ப்பினை பெற்றார். அதன்படி மேற்படி தர்மராஜ்–ன் பணிவிடை பலன்களை வழக்கு தொடுத்த திருமதி.பூங்குடி மற்றும் எதிர்மனுதாரர்கள் திருமதி.ராஜம்மாள், செல்வி.லெட்சுமி, செல்வி.கௌரி ஆகியோருக்கு தலா 1/4 பாகம் கிடைக்க தீர்ப்பாகி அப்பணத்தினை பெற்றனர். மேற்படி வழக்கில் தர்மராஜ்–ன் இறப்பிற்கு பின்னால் வரவேண்டிய மாதாந்திர பென்சன் பற்றி எந்தவித குறிப்பும் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர், தன்னையும் எதிர்மனுதாரராக சேர்த்து மாண்புமிகு நீதிமன்றத்திலிருந்து புதிததாக ஒரு

வாரிசுரிமை சான்றிதழ் பெற்று வருமாறு அறிவுறுத்தினர்.

iii. லேட்.தர்மராஜ் அவர்களின் தாயார் திருமதி.ராஜம்மாள் மற்றும் தந்தை ஆண்டியப்பன் கடந்த 01.05.2006 மற்றும் 02.01.2015ம் தேதிகளில் காலமானார்கள். 2ம் மனுதாரருக்கு கடந்த 03.02.2016ம் தேதியன்று திருமணமாகியது. 3ம் மனுதாரருக்கு கடந்த 07.07.2021ம் தேதியன்று திருமணமாகியது. நடைமுறையில் உள்ள இந்திய இரயில்வே சட்டதிட்டத்தின்படி தர்மராஜ் அவர்களின் இறப்பிற்கு பின்னால் வரவேண்டிய மாதாந்திர பென்சனில் முதல் மனைவி திருமதி.பூங்குடி அவர்களுக்கு பாதியும், திருமணமாகும் வரை மூத்த மகளான 2ம் மனுதாரருக்கு பாதியும், 2ம் மனுதாரருக்கு திருமணமானபின் 3ம் மனுதாரருக்கு திருமணமாகும் வரை பாதியும் பாத்தியப்பட்டதாகும். 2 மற்றும் 3 மனுதாரர்களுக்கு பின்னால் முழு பென்சனும் முதல் மனைவி அடைய வேண்டியதாகும். எனவே, மனுதாரர்கள் வாரிசுரிமை சான்றிதழ் பெற வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**<u>3. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

i. A.தர்மராஜ் என்பவர் தென்னக ரயில்வே, திருச்சிராப்பள்ளி ஜங்ஷன், திருச்சிராப்பள்ளி குட்ஷெட், கேரேஜ் மற்றும் வேகன் பிரிவில் பிட்டராக பதவி வகித்து வரும் காலத்தில், பணியில் இருக்கும்போது கடந்த 29.01.1995ம் தேதியன்று பெரம்பூர் இரயில்வே மருத்துவ மனையில் காலமானார். அவருடைய பணிபதிவேட்டில் உள்ள குடும்ப விபரத்தில் பூங்குடி என்பவரை மனைவியாக நியமித்திருந்தார். எனவே, காலஞ்சென்ற தர்மராஜ்–ன் பணிபலன்களை பெற வாரிசுரிமை சான்றிதழ் பெற்று வர அறிவுறுத்தினார்.

ii. அதன்படி 1ம் மனுதாரர், 2, 3 மனுதார்களை சேர்த்து மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளியில் Succ.O.P.No.51/1999 என்ற எண்ணில் வழக்கு தொடுத்து, கடந்த 29.08.2003ம் தேதியன்று தீர்ப்பினை பெற்றார். அதன்படி மேற்படி தர்மராஜ்–ன் பணிவிடை பலன்களை பொருத்து வழக்கு தொடுத்த திருமதி.பூங்குடி மற்றும் எதிர்மனுதாரர்கள் திருமதி.ராஜம்மாள், செல்வி.லெட்சுமி, செல்வி.கௌரி ஆகியோருக்கு தலா 1/4 பாகம் கிடைக்க

தீர்ப்பாகி அப்பணத்தினை பெற்றனர். கடந்த 01.05.2006 ம் தேதியன்று ராஜம்மாள் என்பவர் காலமானார். SOP.No.51/1999 மனுவில் பிறப்பிக்கப்பட்ட 29.08.2003 ம் தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில் இறந்து போன தர்மராஜ்–ன் பணிபலன்கள் அவரது வாரிசுகளுக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. குடும்ப ஓய்வூதியம் குறித்து அந்த உத்தரவில் எவ்விதமான அறிவுறுத்தலும் இல்லை. ஆகையால், எதிர்மனுதாரர்கள் தகுந்த நீதிமன்ற உத்தரவு பெற்ற வரும்படி மனுதாரர்களை அறிவுறுத்தினார்கள். குடும்ப ஓய்வூதியம் குறித்து ரயில்வே ஓய்வூதிய விதிகள் 1993 இறந்து போன நபரின் மனைவிக்கு அவரது இறப்பு அல்லது மறுமணம் வரை மகனுக்கு அல்லது மகளுக்கு அவர்களது திருமணம் அல்லது 25 வயதை எட்டும் வரையிலும் வழங்கலாம் என சொல்லியுள்ளது. முதல் திருமணம் ஊர்ஜிதத்தில் உள்ளபோது இரண்டாவது திருமணம் செல்லத்தக்கதல்ல என்பதால் இரண்டாவது மனைவிக்கோ இரண்டாவது மனைவியின் குழந்தைகளுக்கோ எவ்வித குடும்ப ஓய்வூதியமும் கிடைக்கக்கூடியதல்ல. 1ம் மனுதாரருக்கு குடும்ப ஓய்வூதியத்தை வழங்க எதிர்மனுதாரர்கள் தயாராக உள்ளார்கள்.

**<u>4. 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>**

i. 1ம் மனுதாரர் மற்றும் 3ம் எதிர்மனுதாரர் இறந்து போன A.தர்மராஜ் என்பவரின் முதல் மற்றும் இரண்டாம் மனைவிகள் ஆவார்கள். 2 மற்றும் 3 மனுதாரர்கள் 3ம் எதிர்மனுதாரரான லீலாவதியின் மகள்கள் ஆவார்கள். A.தர்மராஜ் என்பவர் 2ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டின் கீழ் தென்னக ரயில்வே, திருச்சிராப்பள்ளி ஜங்ஷன், திருச்சிராப்பள்ளி குட்ஷெட், கேரேஜ் மற்றும் வேகன் பிரிவில் பிட்டராக பதவி வகித்து வரும் காலத்தில், பணியில் இருக்கும்போது கடந்த 29.01.1995 ம் தேதியன்று பெரம்பூர் இரயில்வே மருத்துவ மனையில் காலமானார்.

ii. மேற்படி காலஞ்சென்ற தர்மராஜ் அவர்களுக்கு 1ம் மனுதாரர் – முதல் மனைவியும், 3ம் எதிர்மனுதாரர் – இரண்டாம் மனைவியும், இவருக்கு பிறந்த மகள்கள் 2 மற்றும் 3 மனுதாரர்கள் வாரிசுகள் ஆவார்கள். 1ம் மனுதாரர், 2, 3 மனுதாரகள் மற்றும் 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளியில் Succ.O.P.No.51/1999 என்ற எண்ணில் வழக்கு

தொடுத்து, கடந்த 29.08.2003ம் தேதியன்று தீர்ப்பினை பெற்றார். அதன்படி மேற்படி தர்மராஜ்–ன் பணிவிடை பலன்களை வழக்கு தொடுத்த திருமதி.பூங்குடி மற்றும் எதிர்மனுதாரர்கள் திருமதி.ராஜம்மாள், செல்வி.லெட்சுமி, செல்வி.கௌரி ஆகியோருக்கு தலா 1/4 பாகம் கிடைக்க தீர்ப்பாகி அப்பணத்தினை பெற்றனர். மேற்படி வழக்கில் தர்மராஜ்–ன் இறப்பிற்கு பின்னால் வரவேண்டிய மாதாந்திர பென்சன் பற்றி எந்தவித குறிப்பும் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர், தன்னையும் எதிர்மனுதாரராக சேர்த்து மாண்புமிகு நீதிமன்றத்திலிருந்து புதிததாக ஒரு வாரிசுரிமை சான்றிதழ் பெற்று வருமாறு அறிவுறுத்தினர்.

iii. லேட்.தர்மராஜ் அவர்களின் தாயார் திருமதி.ராஜம்மாள் மற்றும் தந்தை ஆண்டியப்பன் கடந்த 01.05.2006 மற்றும் 02.01.2015ம் தேதிகளில் காலமானார்கள். 2ம் மனுதாரருக்கு கடந்த 03.02.2016ம் தேதியன்று திருமணமாகிவிட்டது. 3ம் மனுதாரருக்கு கடந்த 07.07.2021ம் தேதியன்று திருமணமாகிவிட்டது . இந்நிலையில், 2ம் மனைவியான 3ம் எதிர்மனுதாரரை சேர்க்காமல் மாண்புமிகு நீதிமன்றத்தில் இரண்டாவதாக Succ.O.P.No.3/2017 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளனர். 3ம் எதிர்மனுதாரர் மாதாந்திர பென்சன் தொகையில் பங்கு பெறுவதில் உரிமையுடையவர் ஆவார். எனவே, 3ம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்து இம்மனுவில் சேர்க்கப்பட்டார்.

iv. காலஞ்சென்ற தர்மராஜ் முதல் மனைவி இருக்கும்போதே முதல் திருமணத்தினை மறைத்து 3ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டார். மேற்படி 3ம் எதிர்மனுதாரருக்கு முதல் குழந்தை பிறந்தவுடன்தான் காலஞ்சென்ற தர்மராஜ்–ன் முதல் திருமணம் குறித்து தெரிய வந்தது. மேற்படி தனது கணவர் இறந்தவுடன் கூலி வேலை செய்து அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கே சிரமமாக உள்ளது. எனவே, காலஞ்சென்ற தர்மராஜ்–ன் மாதாந்திர பென்சன் தொகையில் சரிபாதி கோரியுள்ளார்.

**5.** இம்மனு தாக்கல் செய்யும் போது, இறந்து போன தர்மராஜின் இரண்டாம் மனைவி லீலாவதியை சேர்க்கப்படவில்லை. அதன் பின்னர், இ.ம.எண்.1/2019, 20.07.2021ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் 3ம்

எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்கள் தரப்பில் 2ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3ம் எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டனர்.

**7.** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கப்படக்கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>8. பரிசீலனையும், தீர்வும் :</u>**

2ம் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை உறுதிபடுத்தி சாட்சியமளித்துள்ளார். அவர் தனது முதல் விசாரணையில் 1ம் மனுதாரர் SOP.No.59/1999 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் 29.08.2003ல் உத்தரவு பெற்றதாகவும், அதன்படி தனது தந்தையாரின் பணிபலன்களில் இந்த மனுதாரர்களுக்கு தலா 1/4 பங்கும், தனது பாட்டி ராஜம்மாளுக்கு 1/4 பங்கம் கிடைக்கக்கூடியது என உத்தரவானதாகும். தனது தகப்பனாரின் மாதாந்திர பென்ஷன் குறித்து எவ்வித குறிப்பும் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் புதியதாக வாரிசுரிமை சான்றிதழ் வாங்கி வரும்படி அறிவுறுத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**9.** SOP.No.59/1999 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1ல் மனுதாரரான பூங்குடி, அப்போதே இளவர்களான லட்சுமி, கௌரி ஆகியோர் இறந்து போன தர்மராஜ்–ன் வாரிசுகள் என சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த மனுவானது குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் இறந்து போன தர்மராஜ்–ன் முதல் மனைவி என்பதும், 3ம் எதிர்மனுதாரர் லீலாவதி இறந்து போன தர்மராஜ்–ன் இரண்டாவது மனைவி என்பதும், 3ம் எதிர்மனுதாரரால் தனது எதிருரையிலேயே ஒப்புக் கொள்ளப்பட்டது. 3ம்

எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனக்கும், இறந்து போன தர்மராஜ்க்கும் 04.07.1991 ல் திருமணம் நடந்ததாகவும், தனக்கு பெண் குழந்தை பிறந்த பிறகுதான் தர்மராஜ்க்கு ஏற்கனவே திருமணமான விபரம் தனக்கு தெரிய வந்ததாகவும் சொல்லியுள்ளார். இவ்வாறாக இறந்து போன தர்மராஜ்க்கு 1ம் மனுதாரர் முதல் மனைவி என்பதும், 2, 3 மனுதாரர்கள் தர்மராஜின் 2 வது மனைவி மூலமாக பிறந்த குழந்தைகள் என்பதும், 3ம் எதிர்மனுதாரர் தர்மராஜின் 2 வது மனைவி என்பதும் இரு தரப்பினர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

**10.** இந்நிலையில், மனுதாரர்கள் தங்களது மனுவில் குடும்ப ஓய்வூதியத்தில் 50 சதவீதத்தை 1ம் மனுதாரருக்கும், 50 சதவீதத்தை 2, 3 மனுதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகையில் 50 சதவீதத்தை 1ம் மனுதாரருக்கும், 50 சதவீதத்தை 2, 3 மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவிட வேண்டுமென பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

**11.** 3ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978 விதி 49 உபவிதி 7(a)(i)ன்படி இறந்து போன அரசு ஊழியரின் அனைத்து மனைவிகளும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் என்றும், ஆகையால் 3ம் எதிர்மனுதாரருக்கும் குடும்ப ஓய்வூதியம் கிடைக்கத்தக்கது என்றும் வாதிட்டார்.

**12.** இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 372 ன்படி இறந்த நபரின் பெயரில் உள்ள கடன்கள் மற்றும் பாதுகாப்பு பத்திரங்களை பெற வாரிசு சான்றிதழ் கோர இயலும். குடும்ப ஓய்வூதியத்தை பெற இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 372 ன் கீழ் வாரிசு சான்றிதழ் கோர இயலுமா? என்பதை பரிசீலனை செய்கையில் ***திருமதி.சாவித்திரிதேவி மற்றும் ஒருவர் ..எதிர்.. மாவட்ட நீதிபதி, ஹனுமன்கர்*** என்ற வழக்கில் மாண்புமிகு ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் குடும்ப ஓய்வூதியம் என்பது இறந்த நபரின் கடனோ மற்றும் பாதுகாப்பு பத்திரங்கள் அல்ல. குடும்ப ஓய்வூதியத்திற்காக வாரிசு சான்றிதழ் கோருவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் தீர்வு கண்டுள்ளது. இறந்து போன தர்மராஜ்–ன் குடும்ப ஓய்வூதியம் இரயில்வே பென்ஷன் விதி 75 ன் கீழ் தீர்மானிக்கக்கூடியதாகும். யார் யார் குடும்ப

**ஓய்வூதியம் பெற தகுதியுடையவர் என்பதை 1, 2 எதிர்மனுதாரர்கள் தங்களது நிர்வாக ரீதியில் முடிவு கண்டிருக்க வேண்டுமே தவிர வாரிசு சான்றிதழ் பெற வலியுறுத்தி ம.சா.ஆ.5 கடிதத்தை வழங்கியுள்ளது சரியானதல்ல. 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் கோரிக்கையை தகுந்த விதிகளின்படி பரிசீலனை செய்து நிர்வாக ரீதியில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஓய்வூதியம் என்பது இறந்து போன அரசு ஊழியரின் சொத்தோ, கடனோ அல்ல. அது அரசால் வழங்கப்படும் சலுகையாகும். *W.P.(MD).No.22457/2017 (*சரோஜா ..எதிர்.. பொது கணக்காளர்*)* என்ற வழக்கில்** *"The concept of family pension cannot be treated as a estate of the deceased government servant and the law relating to devolution of the estate of the government servant cannot be applied in the cases of family pension"* **என தீர்வு கண்டுள்ளது. ஆகையால், சட்டப்படியான வாரிசு அல்லாத ஒருவர் கூட ஓய்வூதிய விதிகளின்படி குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடையவராக இருக்கலாம். ஆகையால், குடும்ப ஓய்வூதியத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகின்றது. 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களின் கோரிக்கையை இரயில்வே பென்ஷன் விதிகளின் கீழ் முடிவு காண உத்தரவிடப்படுகிறது.**

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

**என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.**

P.GOWDHAMAN Digitally signed by P.GOWDHAMAN

**முதன்மை சார்பு நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி :</u>**

**ம.சா.1 – திருமதி. பூங்குடி**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ. 1 | 29.08.2003 | Succ.Op.51/1999–ன் உத்தரவு | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ. 2 | 29.09.1995 | இறந்து போன தர்மராஜ்–ன் வாரிசு சான்றிதழ் | உண்மை நகல் |
| ம.சா.ஆ. 3 | 01.05.2006 | ராஜம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.4 | 21.03.2011 | 2 ம் மனுதாரர் கொடுத்த கடிதம் | அசல் |
| ம.சா.ஆ.5 | 11.02.2014 | 2 ம் எதிர்மனுதாரர் 1 ம் மனுதாரருக்கு கொடுத்த கடிதம் | அலுவலக நகல் |
| ம.சா.ஆ.6 | 02.01.2015 | ஆண்டியப்பன் என்பவரின் இறப்பு சான்றிதழ் | அசல் |
| ம.சா.ஆ.7 | 03.02.2016 | 2 ம் மனுதாரரின் திருமண அழைப்பிதழ் | அசல் |
| ம.சா.ஆ.8 | 07.07.2021 | 3 ம் மனுதாரரின் திருமண அழைப்பிதழ் | அசல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** :

எ.ம.சா.1 – திருமதி.லீலாவதி.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ. 1 | 04.07.1991 | திருமண அழைப்பிதழ் | அசல் |
| எ.ம.சா.ஆ. 2 | – | இறந்து போன தர்மராஜ் என்பவரும் 3 ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் | அசல் |
| எ.ம.சா.ஆ. 3 | – | 3 ம் எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் |

P.GOWDHAMAN Digitally signed by P.GOWDHAMAN

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.